செய்திப் பணிப்பாளர் /செய்தி ஆசிரியர் 21.07.2020

# செய்தி வெளியீடு

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (அடிப்படை 2013=100) : யூன் 2020


**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**

**பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு**

தொலைபேசி: 011-2147414 தொலைநகல்: 011-2877945 மின்னஞ்சல் prices@statistics.gov.lk


2020 யூன் மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு.) பற்றிய அறிக்கையை வெளியிடுகையில் தொகைமதிப்பு, புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம், தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருட மாற்றத்தினால் (கடந்த வருடத்தின் அதே மாத தே.நு.வி.சு. மீது நடப்பு மாத தே.நு.வி.சு. இல் சதவீத மாற்றம்) அளவிடப்பட்டவாறு முதன்மைப் பணவீக்கமானது 6.3% ஆக கணக்கிடப்பட்டுள்ளது என தெரிவித்தார். 2020 மே மாதம் பொருட்டு பதிவாகிய முதன்மைப் பணவீக்கம் 5.2% ஆக இருந்தது. 2020 யூன் மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்க வீதத்திற்கான பங்களிப்புகள் முறையே 5.8%, 0.5% ஆக காணப்படுகின்றன. அதேவேளை, 2.1% முதன்மைப் பணவீக்கத்தின் பெறுபேறாக 2019 யூன் மாதத்தில் பணவீக்கத்திற்கான உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்தான பங்களிப்புகள் முறையே -1.3%, 3.4% ஆக காணப்பட்டன. 2019 யூன் மாதத்துடன் ஒப்பிடுகையில், உணவுப் பிரிவில் அதிகரித்த சதவீதம் பதிவாகியமைக்கான பிரதான காரணம், 2020 யூன் மாதத்தில் நிலவிய உயர்வான விலை மட்டங்களே குறிப்பாக தேங்காய், அரிசி, தேங்காய் எண்ணெய், புதிய மீன், சீனி மற்றும் மஞ்சள்தூள் ஆகியவற்றின் அதிகரித்த விலைகளாகும்.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிடுகையில் 2020 மே மாதத்தில் பதிவாகிய 135.4 இருந்து 2020 மே மாதத்தில் 137.3 ஆக அதிகரித்துள்ளது. இது, 2020 மே மாதத்துடன் ஒப்பிடுகையில், 1.9 சுட்டெண் புள்ளிகள் அல்லது 1.4 சதவீத அதிகரிப்பொன்றைக் காட்டுகிறது. இந்த மாதம் மீது மாத மாற்றத்திற்கான காரணம், உணவுப்பொருட்களின் சுட்டெண் பெறுமதிகள் 1.38% இனாலும் உணவல்லாப்பொருட்களின் சுட்டெண் பெறுமதி 0.03% இனாலும் அதிகரித்தமையேயாகும்.

உணவுப்பொருட்களின் அதிகரித்த விலைகள் மரக்கறி, சீனி, புதிய மீன், முட்டை, அரிசி, மஞ்சள்தூள், கோழி இறைச்சி, உருளைக்கிழங்கு, தேங்காய் எண்ணெய், எலுமிச்சம்பழம், மைசூர் பருப்பு, புதிய பழங்கள், விசுக்கோத்து, தேங்காய், பாசிப்பயறு, பப்படம், கௌப்பி மற்றும் டின் மீன் என்பன பொருட்டு பதிவாகின. எனினும், உணவுப்பொருட்களின் குறைந்த விலைகள் வெள்ளைப்பூடு, கருவாடு, செத்தல் மிளகாய், ஈரப்பலா, மிளகாய்த்தூள் மற்றும் கறித்தூள் என்பன பொருட்டு பதிவாகின.

முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2020 யூன் மாதத்தில் உணவல்லாப்பொருட்களின் சுட்டெண் பெறுமதிகளின் அதிகரிப்புக்கு காரணம், ‘ஆடையும் காலணியும்’, ‘சுகாதாரம்’, ‘போக்குவரத்து’ (வாகனங்கள் கொள்வனவு) மற்றும் ‘உணவகமும் ஹோட்டல்களும்’ ஆகிய பிரிவுகளில் ஏற்பட்ட விலை அதிகரிப்புக்களாகும். எனினும், ‘அற்ககோல் பானங்கள், புகையிலை மற்றும் தியக்க மருந்துகள்’ (வெற்றிலை) மற்றும் ‘வீடமைப்பு, நீர், மின்வலு, எரிவாயு ஏனைய எரிபொருள்கள்’ (பராமரிப்புக்கான பொருட்கள்) போன்ற பிரிவுகள் பொருட்டு விலை குறைவுகள் பதிவாகின. மேலும், முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில், ‘தளபாடம், குடித்தன உபகரணம் மற்றும் வழமையான குடித்தன பராமரிப்பு’ பிரிவு பொருட்டு சற்று விலை அதிகரிப்பும், ‘பொழுதுபோக்கும் கலாசாரமும்’ மற்றும் ‘நானாவிதப் பொருட்களும் சேவைகளும்’ ஆகிய பிரிவுகள் பொருட்டு சற்று விலை குறைவுகளும் பதிவாகின. அதேநேரம், ‘தொடர்பாடல்’ மற்றும் ‘கல்வி’ ஆகிய பிரிவுகளின் விலைச் சுட்டெண்கள் இம்மாதத்தில் மாற்றமின்றி காணப்பட்டன.

2020 யூன் மாதத்திற்கான தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருட மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறு பொருளாதாரத்தில் தளம்பலுறும் உணவு, வலு மற்றும் போக்குவரத்து போன்றன தவிர்ந்த மூலாதார பணவீக்கத்தை பிரதிபலிக்கும் மையப் பணவீக்கமானது, 2020 மே மாதத்தில் பதிவாகிய 3.7% இருந்து 4.4% வரை அதிகரித்துள்ளது.




## தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)

| வருடம் | மாதம் | சுட்டெண் | | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | | வருடத்தின் மீது வருட பணவீக்க % | |
|---|---|---|---|---|---|---|---|
| | | தே.நு.வி.சு (முதன்மை) | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு (முதன்மை) | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு (முதன்மை) | தே.நு.வி.சு (மையம்) |
| **2019** | யூன் | 129.2 | 133.0 | 0.4 | 0.0 | 2.1 | 6.1 |
| | யூலை | 129.4 | 133.4 | 0.2 | 0.3 | 2.2 | 6.1 |
| | ஓகஸ்ட் | 129.7 | 133.7 | 0.2 | 0.2 | 3.4 | 5.9 |
| | செப்ரெம்பர் | 130.6 | 134.0 | 0.7 | 0.2 | 5.0 | 5.6 |
| | ஒக்ரோபர் | 131.9 | 134.4 | 1.0 | 0.3 | 5.6 | 5.6 |
| | நவம்பர் | 132.9 | 134.6 | 0.8 | 0.1 | 4.1 | 5.5 |
| | டிசம்பர் | 135.0 | 134.2 | 1.6 | -0.3 | 6.2 | 5.2 |
| **2020** | ஜனவரி | 137.0 | 135.3 | 1.5 | 0.8 | 7.6 | 3.9 |
| | பெப்ரவரி | 137.0 | 135.8 | 0.0 | 0.4 | 8.1 | 3.4 |
| | மார்ச் | 135.2 | 136.0 | -1.3 | 0.1 | 7.0 | 3.2 |
| | ஏப்ரல் | 134.8 | 136.9 | -0.3 | 0.7 | 5.9 | 3.2 |
| | மே | 135.4 | 137.9 | 0.4 | 0.7 | 5.2 | 3.7 |
| | யூன் | 137.3 | 138.9 | 1.4 | 0.7 | 6.3 | 4.4 |